Online Case
DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: STC.No.5/2024**
**prosecution witness: PW–1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent. Petiton filed.
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்வான்சியா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>07.05.2024</u>
<u>முதல்விசாரணை</u>

நான் இராமேஸ்வரம் மல்லிகை நகரில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்துவருகிறேன். எதிரியை தெரியாது. கடந்த 19.09.2022 ம் தேதி மாலை 06.30 மணியளவில் என் அண்ணன் வீட்டில் பாய்க்காய்ச்சும் நிகழ்வு முடிந்து எங்கள் வீட்டிற்கு செல்வதற்காக நான்,என் கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் எங்களுக்கு சொந்தமான இ'ருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது, தங்கச்சிமடம் வில்லுயுண்டிதீர்த்தம் வளைவில் வந்தபோது, ஒரு டிரக் இண்டிக்கேட்டர் எதுவும் போடாமல் திடீரென்று பின்புறமாக எடுத்தபோது அந்த டிரக்கில் இருந்த பைப் என் கணவர்மீது பட்டு நாங்கள் சென்ற வாகனம் விபத்திற்குள்ளானது. அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது கணவருக்கு நெற்றியிலிருந்துமூக்கு வரை இரடண்டாக பிளந்து காயம் ஏற்பட்டது. இடது காலிலும் காயம் ஏற்பட்டது. குழந்தைகளுக்கு லேசாக சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அங்கு நின்றுகொண்டிருந்த எனது அண்ணன் விபத்தை பார்த்துவிட்டு, அவர் மற்றும் அவரது நண்பர் எங்கள் அனைவரையும் ஆட்டோவில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது தங்கச்சிமடம்க காவலர் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். எனது கணவர் ஒருமாதமாக சிகிச்சையில் இருந்தார். அவர் வந்தபிறகு இழப்பீடு பெறுதவற்காக பாம்பன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன. போலீசார் என்னைவிசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

தற்போது சொன்னதைதான போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற பகுதி இருட்டான பகுதி என்றால் சரிதான். எதிரியின் வாகனம் அங்கு நின்றுகொண்டிருந்தது. அவ்வாறு நின்றுகொண்டிருந்த வண்டி வேகமாக வளைவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் எனது அண்ணன் வீட்டு விசேஷத்திற்கு போய்விட்டுதான் நானும், என் கணவரும் வந்தோம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்களுக்கு மேல் செல்வது சட்டப்படி குற்றம் என்றால் சரிதான். எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் வீட்டு விசேஷத்திற்கு சென்றுவிட்டு வரும்போது எனது கணவர் அதிகமாக மது அருந்தி வண்டி ஓட்டியதால்தான் நிலைதடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.05.07 17:37:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.